வணக்கம்! இந்தச் செய்தி Basel-Stadt மற்றும் Baselland இல் உள்ள நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான பல்வேறு தொடர்பு புள்ளிகள் பற்றியது. குழந்தை எங்கிருந்து சரியான உதவியைப் பெற முடியும் என்பதைக் காட்ட நான் 4 கேள்விகளைப் பயன்படுத்துகிறேன்.

**உங்கள் குழந்தை நோய்வாய்ப்பட்டுள்ளதா, குழந்தை மருத்துவரைப் பார்க்க வேண்டுமா இல்லையான என்று உங்களுக்குத் தெரியவில்லையா?**
இந்தச் சந்தர்ப்பத்தில், பெற்றோர் ஆலோசகர்கள் ஆதரவு வழங்க முடியும். அவர்கள் மருத்துவப் பயிற்சி பெற்றவர்களாக உள்ளதுடன், உங்கள் குழந்தைக்கான சிறந்த ஆதரவை எங்கு பெறலாம் என்பதை அறிய சேர்ந்து உங்களுடன் பணியாற்றுவார்கள். இந்த ஆலோசகர்கள் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் வளர்ப்பு பற்றிய கேள்விகளுக்கும் உதவலாம். பெற்றோர் ஆலோசனைக்கான தொலைபேசி எண்களையும் முகவரிகளையும் www.meinkindistkrank.ch இல் காணலாம்.

**உங்கள் குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல விரும்புகிறீர்களா?**
அப்படியாயின் குழந்தை மருத்துவரின் அலுவலகத்திற்குச் செல்லுங்கள். மருத்துவரின் அலுவலகத்தில் பரிசோதனை செய்ய உங்களுக்கு சந்திப்பு தேவை. நீங்கள் தொலைபேசியில் இதை ஏற்பாடு செய்யலாம். குழந்தை மருத்துவரின் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமா என்பதையும் நீங்கள் தொலைபேசியில் கேட்கலாம். உங்களுக்கு இன்னும் குழந்தை மருத்துவர் இல்லையென்றால், பெற்றோர் ஆலோசகர்கள் உங்களுக்கு உதவ முடியும்.

**உங்கள் குழந்தை அவசர சிகிச்சை அறைக்குச் செல்ல வேண்டுமா, உங்கள் குழந்தை மருத்துவர் இல்லையா என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?**
அப்படியாயின் மருத்துவ அவசர அழைப்பு மையத்திற்கு அழையுங்கள். அவர்கள் உங்களுக்கு தொலைபேசியில் இலவச ஆலோசனை வழங்குவார்கள் மற்றும் இரவு மற்றும் வார இறுதி நாட்கள் உட்பட 24 மணிநேரமும் அவர்களைத் தொடர்புகொள்ள முடியும். தொலைபேசி எண் 061 261 15 15.

**உங்கள் பிள்ளைக்கு காத்திருக்க முடியாத ஒரு மருத்துவப் பிரச்சினை உள்ளதா?**
அப்படியாயின், பல்கலைக்கழக சிறுவர் மருத்துவமனையின் (UKBB) அவசரப் பிரிவுக்குச் செல்லுங்கள். பிரச்சனை தீவிரமாக இல்லாவிட்டால், குழந்தை மருத்துவரின் அலுவலகத்தை அழையுங்கள்.

**உங்கள் குழந்தை உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளதா?**
அப்படியாயின் ஆம்புலன்ஸ் வண்டியை நேரடியாக 144 என்ற எண்ணில் அழைக்கவும்.

அனைத்து முகவரிகளையும் தகவல்களையும் www.meinkindistkrank.ch இல் காணலாம்.

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் எனது வாழ்த்துக்கள்.